## அரசு நிர்வாகமும் அனர்த்துபவர்களும்...

அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், அதைத் தொடர்ந்த விரைவான களப்பணிகளுமே, சென்னை ஒரே நாளில் மீண்டதற்குக் காரணம். இது தொடர்பான பல தகவல்களைத் தன்னார்வலர்கள் பகிர்ந்து வருகின்றனர். சென்னை மாநகராட்சியுடன் இணைந்து செயல்பட, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பதிவு செய்திருந்த நிலையில், விஷமவாதிகள் சிலர் திங்கட்கிழமை இரவே உதவிகள் கேட்டு, பல்வேறு குழுக்களில் பதிவிட ஆரம்பித்துள்ளனர்.

“அப்படி உதவி கேட்டுப் பேசியவர்களிடம் ஒழுங்காக நிவாரண முகாமை அணுகுங்கள். உங்களுக்கு என ஒதுக்கப்பட்ட மேற்பார்வையாளரை அழையுங்கள் என்றதும், ஃபோனை கட் செய்து விட்டனர்" எனப் பதிவு செய்கிறார், பேரிடர் காலங்களில் களத்தில் நிற்கும் தன்னார்வலர் இனியன். துணை முதல்வர் அலுவலகத்தின் நேரடிக் கண்காணிப்புக் குழுவிடம், ஒரு பிரச்சினையைச் சொன்னால், அடுத்த 2 மணி நேரத்தில் சரிசெய்து வருகின்றனர். மழை வெள்ளத்தை எதிர்கொள்வது தொடர்பாக, கடந்த மூன்று மாதங்களில் நடைபெற்ற அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைக் கூட்டங்களிலும் பங்கேற்று, இதுநாள் வரை கிடைத்த அத்தனை அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டோம். அப்போதிலிருந்து சொன்ன ஆலோசனைகளில் (suggestion) 90% வரை அரசாங்க நிர்வாகத்தால் செயல்படுத்தப்பட்டன.

கண்கூடாக அவற்றைக் கண்டு வருகிறேன் என்று கூறியுள்ளதுடன், நிலைமை கை மீறும்போது யார் யார் களத்திற்குச் செல்ல ஆயத்தம் என்னும் உரையாடல்கள்கூட அந்தக் குழுவில் நடைபெற்றது என்கிறார் இனியன்.

அந்தக் குழுவில் இணைந்துள்ள மற்றொரு தன்னார்வலர், 16.10.2024 அன்று காலை 11 மணிக்கு மண்டலம்-5-இல் (zone-5) இருந்து 500 பிஸ்கட் பாக்கெட்களைப் பெற்று, இரத்தன் பஜார், சிங்கர் தெரு, ஈவினிங் பஜார் போன்ற பகுதிகளில் இருக்கும் சாலையோர மக்களின் குழந்தைகளுக்கு வழங்கினோம். அது மட்டுமல்லாமல், பல்வேறு பகுதிகளிலும் பார்வையிட்டு வந்தோம். நாங்கள் பார்த்த இடங்களில் எங்கும் தண்ணீர் தேங்கி நிற்கவில்லை. அரசு மற்றும் மாநகராட்சிப் பணியாளர்கள் அவ்வளவு வேலை செய்திருக்கிறார்கள். அரசும் மக்கள் பிரதிநிதிகளும் முழுமையாகக் களத்தில் இருந்து பணியாற்றி இருக்கிறார்கள், என்கிறார்.

## :ப்ளாஷ்பேக்





பாரதி மோகன்

### மாபெரும் இலக்கியப் பணி!

2009-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியில் சங்கத்தமிழ்ப் பாடல்களை **‘தமிழருவிக் கவிதை முழக்கம்’** என்ற தலைப்பில் அவரே விளக்கி, ஒரு தொடரைக் கொண்டு வந்தார். இந்தத் தொடர் வாரம் ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை அன்றும் தைத்திருநாள் போன்ற தமிழர் கொண்டாட்டங்களின் போதும் வெளியாகிப் பெரும் வரவேற்பைப் பெற்றது. அப்போது, இந்தத் தொடரை இயக்கும் வாய்ப்பையும், தலைவர் கலைஞர் அவர்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றேன். இந்தத் தொடர் மூன்றரை வருடம் வெளியானது, 350 கவிதைகள் அதில் வாசிக்கப்பட்டன. எப்போது நினைத்தாலும், அது ஒரு மாபெரும் பணி என்பேன்.

**– பாரதி மோகன், திரைப்பட இயக்குநர், வைத்தீஸ்வரன்கோவில், நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞரின் பரப்புரை!

1959-இல் நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் 90 இடங்களில் 45 இடங்களில் தி.மு.க. வெற்றி பெற. கலைஞரின் பரப்புரையும் அவரின் ஆரம்பக்கால வெற்றிகளும் காரணமாக அமைந்தன. மேலும் 50 ஆண்டுகளுக்கும் மேலாக **‘உடன்பிற;ப்பே’** என அவர் எழுதிய கடிதங்களே அரசியலைத் தாண்டிக் கட்சித் தொண்டர்களை அவரோடு பிணைக்கக் காரணமாக அமைந்தன.

# சீரணி ⇒ இளைஞர் அணி

33

**ந.வினோத்குமார்**

தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் ‘சீரணி முதல் இளைஞர் அணி வரை’...

ஓவியம் : ரவி பேலட்

# மக்கள் தொண்டின் மறுபெயர் சீரணி!




*சீரணியின் செயல்பாடுகள் குறித்து கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடாக அன்றிருந்த* **‘நம்நாடு’**, *முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970-இல் தொடங்கப்பட்ட* **‘தமிழரசு’** *ஆகிய இதழ்களில் மட்டும்தான், அவ்வப்போது செய்திகள் வந்துகொண்டிருந்தன.*

*1967-ஆம் ஆண்டு சீரணி தொடங்கப்பட்டது முதல் 1971-ஆம் ஆண்டு வரை ‘நம்நாடு’ இதழில் தொடர்ச்சியாக கட்டுரைகளாகவோ, செய்தித் துணுக்குகளாகவோ வந்து கொண்டிருந்தன. 1972-இல் புரட்சி நடிகர் செய்த பொல்லாப்புகளை எதிர்த்து, கழகத்துக்கு ஆதரவான செய்திகளுக்கு நிறைய இடம் தர வேண்டியிருந்ததால், சீரணி குறித்த செய்திகள் வெளியாவதில் ‘நம்நாடு’ இதழில் தொய்வு ஏற்பட்டது.*

*போலவே ‘தமிழரசு’ இதழில் 1972, 1973 -ஆம் ஆண்டுகளில் சீரணி குறித்துப் பெரிய அளவில் செய்திகள் வெளியாகவில்லை. இந்நிலையில், 1974-ஆம் ஆண்டு டிசம்பர் 1-ஆம் தேதியிட்ட ‘தமிழரசு’ இதழில்* ***‘பொன்னான பணிகள் செய்யும் அண்ணா அமைத்த சீரணி’*** *என்ற தலைப்பில், அன்றைய சீரணி தனி அலுவலர் எம்.அப்துல்ரஹீம் எழுதிய கட்டுரை ஒன்று வெளியாகி உள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:*

*“மோட்டார் நன்றாக ஓட, அதை ஓட்ட விசை இருந்தால் மட்டும் போதாது. அது தவறான வழியில் செல்லாமல் தடுக்க பிரேக்கும் வேண்டும். நாடு செழிக்க, நல்ல ஆறு இருந்தால் மட்டும் போதாது. அது தடம்புரண்டு ஊரை அழித்திடாமலிருக்கக் கரை வேண்டும். சமூகத் தொண்டு புரிய இளைஞர்கள் பல பேர் இருந்தால் மட்டும் போதாது. அவர்களின் ஆற்றலை, திறமையை, உணர்ச்சியை ஆக்கப் பணிகளுக்குத் திருப்ப கட்டுப்பாடான அணி ஒன்று தேவை. அதுதான் சீரணி.*

*கிராமங்களுக்குத் தேவையான திட்டங்களை உருவாக்கி, ஒன்றிய அளவில் செயல்படுத்தவும், கோட்ட அளவில் மேற்பார்வையிடவும், மண்டல அளவில் ஆய்வு செய்யவும், மாநில அளவில் திட்டத்தின் சாதனைகளைப் பரிசீலிக்கவும், கூற்றம், கோட்டம், மண்டலம், மாநிலம் எனப் பிரித்து, குழுக்களையும் தலைவர்களையும் நியமித்து, சீரணிப் பணிகளைச் செயல்படுத்த வழி செய்யப்பட்டுள்ளது. சீரணித் தொண்டர்களுக்கு அரசின் சார்பில் உதவ, கூற்ற அளவில் ஆணையாளர்களும், கோட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உதவி செய்கிறார்கள்."*

*இந்த அமைப்பில் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள் எனப் பல துறையினர், அரசியலில் ஈடுபாடில்லாத முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் என மாநிலம் முழுவதும் 56 ஆயிரத்து 180 தொண்டகள் சீரணியில் இருப்பதாகக் கூறி, அவர்கள் மேற்கொண்ட சாதனைப் பணிகளை அந்தக் கட்டுரை பட்டியலிட்டுள்ளது. அந்தப் பட்டியல் அடுத்த அத்தியாயத்தில்...!*

**...வெற்றிநடை போடும்.**

### சீரணித் துளிகள்!



● 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு தொடங்கப்பட்டது. அந்தப் பிரிவின் கீழ், நூற்றுக்கும் மேற்பட்ட செய்திப் படங்கள் தயாரிக்கப் பட்டன. அவற்றின் முதல் வெளியீட்டு விழா, 1968-ஆம் ஆண்டு மே 4 அன்று வெளியிடப்பட்டன. சீரணியின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்து, ‘வீட்டுக்கு ஒருவர்’ என்ற படமும் வெளியானது.

● 1973-ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளையொட்டி, தஞ்சை மாவட்ட ஒன்றியங்கள் 15.9.1973 முதல் 21.9.1973 வரை அண்ணா பிறந்த வாரத்தை, **‘சீரணி வாரம்’** என்று சிறப்பாகக் கொண்டாடியிருக்கின்றனர். அந்த வாரத்தில் சீரணியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களுக்கு சீரணி பற்றிய பேச்சுப் போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டு, வெற்றியாளர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# பொய்ப்பெட்டி

33

**கோவி.லெனின்**

“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்...”

***‘சென்னையில், மழைநீர் வடிகால் பணிகள் சரியில்லை’ என்று சொன்ன அதே வாயால், சென்னையை மட்டும்தான் கவனிப்பீர்களா, கோவை, மதுரை போன்ற நகர மக்கள் மழையில் தவிக்க வேண்டுமா, என்றும் எதிர்க்கட்சிகள் கேட்கிறார்களே?***

*வாய் மட்டும் இல்லாவிட்டால், அவர்களை ஏதோ ஒன்று இழுத்துக் கொண்டு போய்விடும் என்று, ஊர்ப்பக்கம் சொல்வார்கள். திராவிட மாடல் அரசுக்கு எதிராக ஆதாரப்பூர்வமான குற்றச்சாட்டுகளைக் கூற முடியாத அ.தி.மு.க, பா.ஜ.க. அவர்களின் அணியில் மறைமுகமாக உள்ள மற்ற கட்சியினரோ ‘அது வேற வாய், இது நாற வாய்’ என்கிற வடிவேலு காமெடி போல பேசிக் கொண்டிருக்கிறார்கள்.*

*காலநிலை மாற்றங்களால் உலகம் முழுவதுமே பருவமழையின் காலமும் அளவும் வெகுவாக மாறியுள்ள நிலையில், கடற்கரையை ஒட்டிய நகரமான சென்னையில் கடந்த மூன்று ஆண்டுகளாக அதிக அளவில் மழை பெய்திருக்கிறது. மேக வெடிப்பு என்கிற அளவில், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் வடகிழக்குப் பருவ மழை பெய்த நிலையிலும், தண்ணீர் வடிவதற்கும், இன்றைய ஆட்சி நிர்வாகம் இல்லை. தமிழ்நாட்டின் உட்புற மாவட்டங்களின் சராசரி மழையளவைக் கணக்கிட்டு, பல நகரங்களிலும் வடிகால் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.*

*பெருமழை பெய்யும்போது தண்ணீர் உடனே வடியாது. அடித்து வெளுக்கும் மழை நின்ற பிறகு, எவ்வளவு நேரத்தில் தண்ணீர் வடிந்து இயல்பு நிலை திரும்பு கிறது என்பதைத்தான் மழைக்கால*





## வதந்திகளே வாயாக...

*மக்களின் இயல்பு வாழ்க்கை மீள்வதற்கும் போர்க்காலச் சூழலைப் போல இரவும் பகலும் திராவிட மாடல் அரசு செயல்பட்டு பணிகளை நிறைவேற்றியிருப்பதை, மழையின் தாக்கத்தை உணர்ந்த மக்கள் பாராட்டுகிறார்கள். முதலமைச்சர், துணை முதலமைச்சர் தொடங்கி மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் நேரடியாகக் களத்தில் நிற்கிறார்கள். கஜா புயல் தாக்கிய போது, தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தவர் மாமனார் வீட்டு விருந்துக்குப் புறப்பட்டுச் சென்றதுபோல உள்கட்டமைப்பு என்று அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரையிலான வளர்ந்த நாடுகளின் அரசாங்கங்களே சொல்கின்றன. சகாரா பாலைவனத்திலேயே மழை நீர் தேங்கும் காலநிலை மாற்றத்தில், தமிழ்நாட்டின் தலைநகர் பாதுகாப்பாகவே இருப்பதால், அரசியல் எதிரிகளுக்கும் அவர்களின் ஊதுகுழலாக உள்ள சில ஊடகங்களுக்கும் வதந்தியே வாயாக மாறியிருக்கிறது.*

**...வினா தொடரும்.**

**தமிழ்நாட்டின் தலைநகர் பாதுகாப்பாகவே இருப்பதால், அரசியல் எதிரிகளுக்கும் அவர்களின் ஊதுகுழலாக உள்ள சில ஊடகங்களுக்கும் வதந்தியே வாயாக மாறியிருக்கிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

633

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.